# சமூக செயற்பாட்டாளர்கள் மீது கைது நடவடிக்கை: மத்திய அரசுக்கு கண்டனம்

**மதுரை, செப். 3:** சமூக செயற்பாட்டாளர் மீது கைது நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் மத்திய அரசுக்கு வழக்குரைஞர்கள், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள் கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

இக்கூட்டமைப்பின் சார்பில் செய்தியாளர் சந்திப்பு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் கூட்டமைப்பின் சார்பில் உயர்நீதிமன்ற மூத்த வழக்குரைஞர் அஜ்மல்கான் கூறியது: மத்திய அரசு பண மதிப்பிழப்பு, ஜிஎஸ்டி வரி விதிப்பு, பெட்ரோல் டீசல் விலை உயர்வு உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் தோல்வியை தழுவியுள்ளது. இதில் இருந்து நாட்டு மக்களை திசை திருப்பவும், அரசுக்கு எதிராக குரல் கொடுப்பவர்கள், போராடுபவர்களை அச்சுறுத்தவும் அவர்கள் மீது பொய் வழக்கு போடப்படுகிறது.

இந்த அடிப்படையில் தான் பிரதமர் நரேந்திர மோடியை கொலை செய்யத் திட்டம் தீட்டியதாக மனித உரிமை செயற்பாட்டாளர்கள் சுதா பரத்வாஜ், கவுதம் நவ்லகா, வரவர ராவ், வெர்னான் கன்சால்வேஸ், அருண் பெரெய்ரா ஆகியோர் மீது பொய் வழக்கு போடப்பட்டு கைதுசெய்யப்பட்டனர். இதில் உச்சநீதிமன்றம் தலையிட்டதை அடுத்து 5 பேரும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். மத்திய அரசின் அடக்கு முறை நடவடிக்கைக்கு வழக்குரைஞர்கள், பேராசிரியர்கள் கூட்டமைப்பு கண்டனங்களை தெரிவிக்கிறது. மனித உரிமை செயற்பாட்டாளர்கள் 5 பேர் மற்றும் தமிழகத்தில் சமூக செயற்பாட்டாளர் முகிலன், மதுரை வழக்குரைஞர் முருகன் ஆகியோர் மீது போடப்பட்ட பொய் வழக்குகளை ரத்து செய்து அவர்களை விடுவிக்கவேண்டும் என்றார்.

இதில் பியுசிஎல் அமைப்பின் தலைவர் பேராசிரியர் முரளி, வழக்குரைஞர் வாஞ்சிநாதன் உள்பட வழக்குரைஞர்கள், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

தினமணி
Tue, 04 September 2018
epaper.dinamani.com/c/31865396